# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 676 –1991 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා – 1991.08.16

676 ஆம் இலக்கம் - 1991 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | — | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | — |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | — | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | — | பொருட்கள் விற்பனையும் பிறவும் | — |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 156 | ஆயவிற்பனையும் குத்தகையும் | — |
| மாகாண சபைகளின் நானாவித அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் | — |
| பதவிகள் - வெற்றிடம் | — | | |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் தேதிகள் நேரங்கள் சம்பந்தமான "அறிவித்தல்" களுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும்வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவித்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 1991, ஒகத்து 23 வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 1991, ஒகத்து 09 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

நெவில் நாணயக்கார,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
1991 ம் வருடம் சனவரி மாதம் 01 ந் தேதி.

# மாகாணசபை அறிவித்தல்கள்

## மத்திய மாகாண மாகாண சபை

மேலே காட்டப்பட்டுள்ள நியதிச்சட்டம், 1991 மார்ச் 26 ஆம் திகதி நடைபெற்ற மத்திய மாகாணத்தின் மாகாண சபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதையும் இதற்கு கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் 1991, மே 31 ஆம் திகதி கிடைத்துள்ளது என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

பீ. ஆர். ரணசிங்க,
செயலாளர்,
மத்திய மாகாண மாகாண சபை.

மத்திய மாகாண மாகாண சபை,
சபை செயலகம்,
த. பெ. இல. 92,
பள்ளேகலை,
குண்டசாலை,
1991, ஜூலை மாதம் 22 ஆம் திகதி.

மத்திய மாகாண மாகாண சபை

**மத்திய மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விவசாய நியதிச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 13 ஆம் திருத்தத்திற்காட்டிய 9 ஆம் உப பிரிவின் 1 ஆம் இலக்க அட்டவணையின் இலக்க, 9 ஆம் விடயத்திற்கமைய வழங்கப்பட்ட தத்துவங்களை அமுல்படுத்துவதற்காக மத்திய மாகாணத்திற்கென விவசாயத் திணைக்களம் ஒன்றினை தாபிப்பதற்கானதொரு நியதிச்சட்டம்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக;

சிறு தலைப்பு.

1. இந்நியதிச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மத்திய மாகாண விவசாய நியதிச்சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். இந்நியதிச்சட்டமானது மாகாண ஆளுநரினால் கையொப்பமிடப்பட்ட திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இந்நியதிச்சட்டத்திற்கமைய குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு விவசாயப் பணிப்பாளரையும் மேலதிக விவசாயப் பணிப்பாளர்களையும் உதவி விவசாயப் பணிப்பாளர்களையும் காலத்திற்குக் காலம் நியமிக்கப்படும் அதிகாரிகளையும் ஊழியர்களையும் உள்ளடக்கியதாக விவசாய திணைக்களமொன்று அமைத்தல் வேண்டும்.

பணிப்பாளரின் பொறுப்பு.

3. (1) பணிப்பாளரின் பொறுப்பானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 13 வது அரசியல் சாசன திருத்தத்தினால் சொல்லப்படுகின்ற 9 வது உப பிரிவில் 1 ஆம் அட்டவணை (மாகாண சபை அட்டவணை) 9 : 1 இலும் 9 : 3 இலும் குறிப்பிட்டுள்ள ஒதுக்கீடுகளினால் மத்திய மாகாணத்தின் விவசாயத்தை அபிவிருத்தி செய்தலும் முன்னேற்றுவதுமாகும்.

அமைச்சரின் அதிகாரம்.

(2) இந்நியதிச்சட்டமோ அல்லது இந்நியதிச்சட்டத்திற்கமையவோ அமுல் செய்யப்படும் சட்டதிட்டங்களுக் கமையவோ, விவசாயப் பணிப்பாளரினால் அல்லது அவரின் உத்தியோகத்தர்கள் அவர்களின் விவேகத்துக்கு எடுக்கப்படும் தீர்மானமொன்றினை தள்ளுபடி செய்வதற்கோ அல்லது மாற்றஞ் செய்வதற்கோ அல்லது திருத்தம் செய்யப்படுவதற்கான அதிகாரம் அமைச்சருக்குண்டு. அமைச்சர் அவர்களின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருப்பதுடன், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பணிப்பாளரும் அத்தீர்மானத்தால் பாதிப்படையும் எல்லா கட்சிகளும் கடமைப்பட்டுள்ளன.

### பகுதி I

மாகாண ஆலோசனைக் குழு

4. (1) மாகாண முதலமைச்சரின் சம்மதத்துடன் அமைச்சரினால் நியமிக்கப்படும் ஏழு நபர்களுக்கு குறையாத எண்ணிக்கையைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றினை ஏற்படுத்தல் வேண்டும்.

(2) அமைச்சரினால் அத்தகைய ஆலோசனைக் குழுவின் தலைவராக அமைச்சின் செயலாளரை நியமித்தல் வேண்டும்.

(3) அமைச்சருக்குப் பதிலாக பதவியமர்த்தப்படும் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் குழுவின் செயலாளராக கடமையாற்றுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் கொண்டுவரப்பட்ட விடயமொன்றினை அல்லது விடயங்கள் சம்பந்தமாகவும் குழுவினால் ஆலோசனை வழங்கப்படவேண்டுமென கருதும் விடயம் சம்பந்தமாகவும் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட பணிகள் பற்றி அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல், ஆலோசனைக் குழுவின் பணியாக இருத்தல் வேண்டும்.

(5) குழுவின் சபைக் கூட்டத்தின் விவகாரம் பற்றிய நடைமுறை விதியும் கூடுதலும் அழைப்பும் நடாத்தலும் மாகாண சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரினால் மேற்கொள்ளப்படும்.

(6) குழுவின் அங்கத்தவரொருவரை அமைச்சருக்கு எந்த சந்தர்ப்பத்திலும் அத்தகைய பதவியிலிருந்து நீக்க முடியும். அமைச்சருக்கு எழுத்து மூலம் தனது இராஜினாமா ஒப்படைக்கின்ற குழு அங்கத்தவரொருவரின் பதவி செல்லுபடியாகாது.

(7) சபைத் தலைவரோ அல்லது வேறு அங்கத்தவர்களோ, ஏதாவது சுகயீனங் காரணமாகவோ, இலங்கையை விட்டுச் செல்வதாலோ அல்லது வேறு காரணங்களாலோ அவர்களுடைய கடமையைச் செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களால் அப்பதவியின் கடமைகளைச் செய்வதற்காக தேவைக்கேற்ப வேறு நபர்களை நியமிக்க முடியும்.

(8) குழு அங்கத்தவரொருவர் தனது பதவியிலிருந்து விலகிச்சென்றால் அல்லது அமைச்சரினால் பதவியிலிருந்து விலக்கப்பட்டால் அல்லது அதனை தவிர்த்து நியமனஞ் செய்யப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வருட காலக்கட்டத்திற்கு அப்பதவியை வகிக்க வேண்டும்.

5. (1) மாகாண விவசாய விவகாரங்கள், அது சம்பந்தப்பட்ட தேவைகளின் விடயங்கள் சம்பந்தமாக பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பிராந்திய ஆலோசனைக் குழுவை அமைச்சரினால் நியமிக்க முடியும். *பிரதேச ஆலோசனைக் குழு.*

(2) (அ) மாகாண பிரதேச செயலாளர்.

(ஆ) பிரிவின் பிரதேச சபைகளின் தலைவர்கள்.

(இ) கமத்தொழில் சேவை பிரிவின் அனைத்து பிரதேச உத்தியோகத்தர்கள்.

(ஈ) மாவட்டத்தின் அனைத்து விவசாய பயிற்சியளிப்பவர்கள்.

(உ) பிரதேசத்தின் சகல விவசாய ஆலோசகர்களும்.

(ஊ) பிரிவைச் சேர்ந்த அனைத்து கிராம சேவை உத்தியோகத்தர்களை பிரதேச ஆலோசனைக் குழு ஒவ்வொன்றும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

(3) மேற்படி பிரிவின் பிரதேச செயலாளர், பிரதேச ஆலோசனைக் குழுவின் தலைவராக இருத்தல் வேண்டும்.

(4) பிரதேச ஆலோசனைக் குழுவின் செயலாளர் பதவிக்கு மேற்படி அங்கத்தினர்களுள் ஒருவர் குழுவின் முதல் கூட்டத்தின்போது தெரிவு செய்யப்பட வேண்டும்.

(5) பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் ஆகியோரினால் ஆலோசனைக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் அனைத்து விடயங்கள் சம்பந்தமாக அத்தகைய ஆலோசனைக் குழுவினால் முறையாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் குறிப்பிட்ட வகையில் விவகாரங்களை முடிவு செய்தல் வேண்டும்.

(6) சம்பந்தப்பட்ட பிரிவில் விவசாயமும் அதற்கொப்பான சந்தர்ப்பங்கள் பற்றியும் ஆலோசனை வழங்குதலும் தவிர அப்பிரிவின் நிறைவேற்று அல்லது நிருவாக கடமைகளும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தலும் இந்த சட்டவாக்கத்திற்கமைய பிரதேச ஆலோசனைக் குழுவுக்கு அதிகாரம் கிடையாது.

6. மாகாண ஆலோசனைக் குழுவிற்கு விசேட விவசாய விவகாரங்கள் பற்றிய உபகுழுக்களை நியமிக்க முடியும். பிரதேச விவசாய ஆலோசனைக் குழுவினால் கட்டளையிடப்படும் பணிகள் மாகாண விவசாய குழுவின் பொது வழி முறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய நியமிக்கப்படும். விசேட விவசாய பணிகள் அதன் உப குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். *மாகாண பிரதேச ஆலோசனைக் குழு பிரதிக் குழு.*

## பகுதி II

### சட்டதிட்டங்களை விதிப்பதற்கான அமைச்சருக்குள்ள அதிகாரம்

7. (1) இந்நியதிச்சட்ட பிரிவுகளையும் வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு விதிமுறைகளாக அடையாளங் காணப்படும் சட்டதிட்டங்களை விதித்தல் அமைச்சரினால் மேற்கொள்ள முடியும். *அமைச்சருக்குள்ள திட்டங்களை ஆற்றும் அதிகாரம்.*

## பகுதி III

### பொது

பொருள் விளக்கம்.

8. (1) இந்நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்படுவதினாலொழிய

"மாகாண சபை" எனப்படுவது மத்திய மாகாண சபை எனப்படும்.

"ஆளுநர்" எனப்படுபவர் மத்திய மாகாண ஆளுநராவார்.

"முதலமைச்சர்" எனப்படுபவர் மத்திய மாகாணத்தின் முதலமைச்சராவார்.

"அமைச்சர்" என்ப்படுபவர் மாகாணத்தின் விவசாயத்திற்கு பொறுப்பான அமைச்சராவார்.

"செயலாளர்" எனப்படுவர் மாகாணத்தின் விவசாய அமைச்சின் செயலாளர் ஆவார்.

"பிரதேச செயலாளர்" எனப்படுபவர் அவ்வப் பிரிவு மேற்பார்வை அதிபராக செயற்படுவதற்கு மாகாண சபையினால் முறையாக நியமிக்கப்படும் செயலாளர்கள் ஆவர்.

"திணைக்களம்" எனப்படுவது பிரதேச விவசாயத் திணைக்களமெனப்படும்.

"பணிப்பாளர்" எனப்படுபவர் பிரதேச விவசாயப் பணிப்பாளராவதுடன், இந்நியதிச்சட்டத்தின் கீழ் கடமைகளை நிலைநாட்ட பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்படும் வேறு அதிகாரி என்வும் பொருள்படும்.

"மேலதிக பணிப்பாளர்" எனப்படுபவர் மேலதிக பிரதேச விவசாயப் பணிப்பாளர் ஆவார்.

"பிரதிப் பணிப்பாளர்" எனப்படுபவர் பிரதி பிரதேச விவசாய பணிப்பாளர் ஆவார்.

"உதவிப் பணிப்பாளர்" எனப்படுபவர் பிரிவுப் பொறுப்பு உதவி விவசாய பணிப்பாளர் ஆவார்.

"மாகாண விவசாய ஆலோசனைக் குழு" எனப்படுவது 4 (1) பந்தியில் குறிப்பிட்டுள்ள மாகாண விவசாய ஆலோசனைக் குழு எனப்படும்.

"பிரதேச விவசாய ஆலோசனைக் குழு" எனப்படுவது 5 (1) பந்தியில் குறிப்பிட்டுள்ள பிரதேச ஆலோசனைக் குழு எனப்படும்.

சிங்கள மொழி பொறுப்பு எடுப்பது பற்றி.

9. இந்நியதிச் சட்ட சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதாவது வேறுபாடு காணப்படின் அதற்கு சிங்கள மொழியே பொறுப்பாகும்.

08-506

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.